செய்தி வெளியீடு எண்.61-2016 நாள்: 28.11.2016

# விழுப்புரம் மாவட்டம் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

## ஆதார் மற்றும் கைப்பேசி எண் இல்லாத குடும்ப அட்டைகளை போலி (Bogus) அட்டை என கருதி தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும். மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்களின் அறிவுரை.

*****

விழுப்புரம் மாவட்டம் பொது விநியோகத் திட்ட செயல்பாடுகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலகக் கூட்டரங்கில் இன்று (28.11.2016) ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில், மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது:

100% அனைத்து விற்பனையும் விற்பனை முனையம் (POS) மூலம் நடைபெற வேண்டுமெனவும், பழுதடைந்த விற்பனை முனையம் (POS) உடனடியாக மாற்றித்தர ஏற்பாடு செய்ய வேண்டுமெனவும், குடோனிலிருந்து நியாயவிலைக் கடைகளுக்கு அனுப்பும் பொருட்களை Online மூலமாகவே அனுப்புவதை மண்டல மேலாளர் உறுதி செய்து கொள்ள வேண்டுமெனவும் மாவட் ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார்.

Unit திருத்தத்தை தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்) மற்றும் வட்ட வழங்களல் அலுவலர்கள் இரு தினங்களுக்குள் முடிக்க வேண்டுமெனவும், ஆதார் மற்றும் கைப்பேசி எண் இல்லாத குடும்ப அட்டைகளை போலி (Bogus) அட்டை என கருதி தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டுமெனவும், பொதுவாக நியாயவிலைக் கடைகளில் குடும்ப அட்டை வகை யூனிட் கைபேசி எண், ஆதார் எண்கள் தவறாக பதிவு செய்திருந்தால் விற்பனையாளர்கள் மூலம் திருத்தப் பட்டியலில் கையொப்பம் பெறப்பட்டு பின்னர் தனி வட்டாட்சியர் (குடிமைப்பொருள்)/ வட்ட வழங்கல் அலுவலர்கள் திருத்தம் செய்ய வேண்டுமெனவும் அறிவுறுத்தினார்.

ஒரு கடையிலிருந்து மற்றொரு கடைக்கு குடும்ப அட்டை மாற்றம் செய்வது (அனைத்து உறுப்பினர்களின் ஆதார் எண்களுடன்) வட்ட வழங்கல் அலவலர்களே செய்து கொள்ளலாம். POS இயந்திரத்தில் பதிவுகள் விடுபட்டுள்ள ஆதார் எண்கள் மற்றும் கைபேசி பட்டியல் தயார் செய்து ஒரு குழு அமைத்து வீடு வீடாக சென்று அவைகளை பெற்று, பதிவு செய்ய வேண்டும். Priority House Hold/ Non Priority House Hold தல விசாரணை செய்து உறுதி செய்யப்பட வேண்டும். ஆறு மாதத்திற்கு மேல் பொருட்கள் பெறாத குடும்ப அட்டைகளின் செயல்பாட்டினை தல விசாரணை செய்து நிறுத்தி வைக்கலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் முனைவர்.இல.சுப்பிரமணியன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.சி.ராஜசேகரன், கூட்டுறவு சங்க இணைப்பதிவாளர் திரு.சந்திரசேகரன், மாவட்ட வழங்கல் அலுவலர் திரு.மனோகரன் மற்றும் குடிமைப்பொருள் வட்டாட்சியர்கள், சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.